# மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்களின்
# அறிவிப்புகள் 2011–2012

**1. கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடியில் மீன்பிடித் துறைமுகம் அமைத்தல்**

கன்னியாகுமரி மாவட்டம் மணக்குடியை சுற்றியுள்ள மீனவக் கிராமங்களைச் சேர்ந்த விசைப்படகுகள் தற்போது சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் கட்டப்பட்டு வருகின்றன. சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் படகுகட்டுவதற்கு போதிய இடவசதி இல்லாததால் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைப் போக்கவும், கூடுதல் படகுகள் கட்டுவதற்கு தளங்கள் உருவாக்கும் பொருட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கன்னியாகுமரி மாவட்டம், மணக்குடி மீனவக் கிராமத்தில் தனியார் பங்களிப்புடன் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இதற்கானப் பணிகள் இந்த ஆண்டே துவங்கப்படும்.

**2. கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போகும் அல்லது பிற நாடுகளில் சிறைவைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு வழங்கப்படும் தின உதவித் தொகையை 50 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தி வழங்குதல்**

கடலில் மீன்பிடிக்கையில் காணாமல் போகும் அல்லது பிற நாடுகளில் சிறைவைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு, தற்போது தின உதவித்தொகையாக 50 ரூபாய் (அல்லது) மாத உதவித்தொகையாக 1,500 ரூபாய், காணாமல் போகும் அல்லது சிறைவைக்கப்படும் மீனவர் கரைதிரும்பும் வரை வழங்கப்படுகிறது. இந்த குறைந்த தொகையைக் கொண்டு, காணாமல் போகும்

அல்லது பிற நாடுகளில் சிறைவைக்கப்படும் மீனவரின் குடும்பம் தங்களது வாழ்க்கையினை நடத்துவதற்கு மிகவும் சிரமப்படுவதை கருத்தில் கொண்டு, காணாமல் போகும் அல்லது பிற நாடுகளில் சிறைவைக்கப்படும் மீனவரின் குடும்பத்திற்கு வழங்கப்பட்டுவரும் தின உதவித்தொகையை 50 ரூபாயிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, நடப்பு ஆண்டு முதல் 250 ரூபாயாக உயர்த்தப்படும்.

**3. மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்கள் தரம் உயர்த்துதல்**

சமீப காலமாக கடல் மீன் உணவு பொருட்களின் தரம் குறித்து, உலகளாவிய அளவில் எழுந்துள்ள விழிப்புணர்வு தொடர்பான சவால்களை சமாளிக்கவும் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்தவும் மீன்பிடித் துறைமுகங்களிலும், மீன் இறங்கு தளங்களிலும் உள்ள வசதிகளை தரம் உயர்த்துதல் அவசியமாகிறது. எனவே, 2011–12ஆம் நிதியாண்டில் தேசிய மீன்வள அபிவிருத்தி வாரியத்தின் மூலம் மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களை தரம் உயர்த்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 12.86 கோடி ரூபாய் மொத்த மதிப்பீட்டிலான கீழ்க்காணும் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதாவது, சென்னை மீன்பிடித் துறைமுகத்தின் தரம் உயர்த்துவதற்கு 12.07 கோடி ரூபாயும், புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் மீன் இறங்குதளத்தின் தரம் உயர்த்துவதற்கு 53.26 இலட்சம் ரூபாயும் மற்றும் கடலூர் மாவட்டம் முடசலோடை மீன்இறங்குதளத்தை தரம் உயர்த்துவதற்கு 25.32 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**4. செயற்கை மீன் உறைவிடங்களை தமிழகத்தின் அண்மைக் கடல் பகுதிகளில் அமைத்தல்**

அண்மைக்கடல் பகுதியில் மீன் உற்பத்தியை அதிகரிக்க, செயற்கை மீன் உறைவிடங்கள் உதவுகின்றன. இவைகள், கடல்வாழ் உயிரினங்களுக்கு வாழ்விடமாக அமைவதோடு, உணவு மற்றும் பாதுகாப்பினையும் அளிக்கிறது. இந்த செயற்கை மீன் உறைவிடங்கள், கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்தை அதிகரிக்கவும், குஞ்சுகள் பாதுகாப்பாக உயிர்வாழவும் வாய்ப்பளிப்பதால், மீன் உற்பத்தி அதிகரிக்கிறது. மேலும், செயற்கை மீன் உறைவிடங்கள் அண்மைக்கடல் பகுதியில் இழுவலைகளைப் பயன்படுத்த தடையாகவும் அமைகிறது. 2011–12 ஆம் நிதியாண்டில், தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் நிதியுதவி மற்றும் அரசு பகுதி 2 திட்டத்தின் கீழ், 19 மீனவக்கிராமங்களின் அருகே உள்ள கடல் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, 2.93 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 19 செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்கப்படும்.

**5. கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேம்படுத்திட, ஒருங்கிணைந்த மாதிரி வடிவமைப்புகளை உருவாக்குதல்**

கடற்பாசி வளர்ப்பு, நண்டு, சிங்கி இறால் கொழுக்க வைத்தல், கூண்டுகளில் மீன்வளர்ப்பு ஆகியவைகள், மீனவ மக்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிப்பதோடு, வருமானத்தை உயர்த்துவதற்கு மாற்று வாழ்வாதார தொழிலாகவும் அமைந்துள்ளது. மேலும், அண்மைக் கடல் பகுதியில் மீன் பிடிப்பு அழுத்தத்தினை

குறைப்பதற்கும் வழிவகை செய்கிறது. எனவே, அனைத்து கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில் நுட்பங்களை ஒரே இடத்தில் செயல்முறை பயிற்சி மூலம் விளக்குவதற்கு ஏதுவாக, கடலோர நீர்வாழ் உயிரின வளர்ப்பு தொழில்நுட்பங்கள் ஒருங்கிணைந்த மாதிரி வடிவமைப்பு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, **2011–12**ஆம் ஆண்டில் கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டையில் **1.35** கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**6. மீனவர்களுக்கு தூண்டில் மூலம் சூரை மீன்பிடிப்பு தொடர்பான பயிற்சி அளித்தல்**

தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ், **6** கண்ணாடி நாரிழைப் படகுகளை வாங்கி, மீனவர்களுக்கு ஆழ்கடல் சூரை மீன் பிடிப்பு பற்றிய பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த பயிற்சி, சிறிய மீன்பிடிக் கலன்களை தொலை தூர கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவிப்பதோடு, தங்கு கடல் (Multiday Fishing) மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஒரு புதிய வழியினையும் உருவாக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, **2011–12**ஆம் நிதியாண்டில் **85.81** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தவிருக்கும் இத்திட்டத்தின் மூலம் மீனவர்களுக்கு அதிக மீன்பிடிப்பு மற்றும் வருவாய் கிடைப்பதுடன் சூரைமீன் ஏற்றுமதி செய்யும் வாய்ப்பும் அதிகரிக்கும்.

**7. நீர்த்தேக்கங்கள் மற்றும் கிராமப்புற மாதிரி மீன்வளர்ப்புக் குளங்களில், மீன்வளத்தை பாதுகாக்கும் பொருட்டு, வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்திய கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்குதல்**

நீர்த்தேக்கங்கள் மற்றும் கிராமப்புற மாதிரி மீன்வளர்ப்புக் குளங்களில் மீன்வளத்தைப் பாதுகாக்கவும், அதன் மூலம் மீன் உற்பத்தியைப் பெருக்கிடவும், மீன் சரணாலயப் பகுதிகளைப் பாதுகாத்திடவும் ரோந்துப்பணி மேற்கொள்ளுவது அத்தியாவசியமானது. எனவே, 2011–12ஆம் நிதியாண்டில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வெளிப்பொருத்தும் இயந்திரம் பொருத்தப்பட்ட 45 கண்ணாடி நாரிழைப் படகுகள் வாங்க 1.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

**8. மீன் வளர்ப்போர்கள் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணை அமைத்திட மானியம் வழங்குதல்**

மீன்குஞ்சு உற்பத்தியில் தனியார் மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகள் அமைப்பதை ஊக்குவித்திட, 50 விழுக்காடு மானியம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. கடலூர், விழுப்புரம், திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில், மொத்தம் 8 முதல் 10 கோடி நுண்மீன்குஞ்சுகள் உற்பத்தித்திறனுடைய 10 மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைகளை தனியார் அமைத்திட மானியம் வழங்கப்படும். இதன் மூலம், சுமார் 2.5 கோடி வளர்ந்த மீன்குஞ்சு விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு, மீன் உற்பத்தி ஆண்டொன்றிற்கு 400 டன் அதிகரிக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,

இத்திட்டத்தினை செயல்படுத்த, மொத்த மானியமாக 50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

**9. பிற மாநிலங்களுக்கு கடல் மீனவர்களை அழைத்துச் சென்று, அவர்களின் திறன் மேம்பாடு அடையச் செய்தல்**

கடல்மீனவர்களை அண்டை மாநிலங்களில் உள்ள பெரிய மீன்பிடித் துறைமுகங்கள், மீன் இறங்கு தளங்கள், மீன்பதனிடும் நிலையங்கள் மற்றும் மீன்விற்பனை மையங்கள் ஆகியவற்றிற்கு நேரில் அழைத்துச்சென்று, அங்கு பின்பற்றப்படும் சிறந்த செயல்முறைகள், பயன்படுத்தும் மீன்பிடிக் கலன்கள் மற்றும் மீன்பிடி வலைகளின் வகைகள் ஆகியவற்றினை தெரிந்து கொள்ள வழிவகை செய்யப்படும். இத்திட்டத்தின் மூலமாக, மீனவர்களிடையே நிலைத்த வளங்குன்றா கடல்மீன்வளம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும். இப்பயிற்சிகாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. கடலோர மீனவ கிராமங்களில் சூரிய சக்தி மற்றும் காற்றின் சக்தியால் இயங்கும் வழிகாட்டி விளக்குகள் அமைத்தல்**

தமிழகத்தில் 9 கடலோர மாவட்டங்களில் தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 10 சூரிய சக்தி மற்றும் காற்றின் சக்தியால் இயங்கும் வழிகாட்டி விளக்குகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டி விளக்குகள் சூரிய ஒளி மற்றும் காற்று சக்தியினை பயன்படுத்தி,

தடையற்ற மின்சக்தியின் மூலம் ஒளிருவதால், மீனவர்கள் பாதுகாப்பாக எந்த நேரமும் கரைதிரும்ப வழிவகுக்கும்.

## 11. தேசிய புரத மேலுணவு இயக்கம் (National Mission for Protein Supplement)

தேசிய புரத மேலுணவு இயக்கத் திட்டத்தின்கீழ் மீன்வளம் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறது. இத்திட்டத்தின்கீழ்,

- மீனவர்களுக்கு கூண்டுகளில் மீன்வளர்க்கத் தேவையான பயிற்சியளித்து, மீன் உற்பத்தியினைப் பெருக்கவும்,
- மீன்விற்பனை நிலையங்களை அமைத்து, மீனவர்கள், தாங்கள் பிடிக்கும் மீன்களுக்கு நல்ல விலையைப் பெற்றிடவும்,
- திருவள்ளூர் மாவட்டம், பூண்டி நீர்த்தேக்கத்தில் 2 ஹெக்டேர் பரப்பில் நான்கு வலை அடைப்பான்கள் (Pen) அமைத்து மீன் குஞ்சுகள் வளர்க்கவும் மற்றும்
- 48 கூண்டுகள் அமைத்து மீன்வளர்ப்பினை மேற்கொள்ளவும் உத்தேசிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, இத்திட்டத்தினை 3.34 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்துவதன் மூலம், ஆண்டொன்றிற்கு கூடுதலாக 480 டன் மீன் உற்பத்தி எதிர்பார்க்கப்படுகிறது.

**12. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக்கழகம் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்திற்கு தலைமை அலுவலகம் கட்டுதல்**

சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம், 1974 ஆம் ஆண்டு முதலும், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், 1991 ஆம் ஆண்டு முதலும் இயங்கி வருகின்றன. தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் இவ்விரு நிறுவனங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சொந்தமாகத் தலைமை அலுவலகக் கட்டிடம் கட்டப்படும்.

**13 மீன்வளத் துறையில் காலியாகயுள்ள பணியிடங்களை நிரப்புதல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, மீன்வளத்துறையில் காலியாகவுள்ள 476 பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*******